**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை – காதுகேளாதோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர் – 2014–15 ஆம் ஆண்டு மாணவர் சேர்க்கை அதிகமாக வரப்பெற்றது – கூடுதல் பாடப்பிரிவு நடத்த அனுமதி வழங்கப்பட்டது – பின்னேற்பு வழங்குவது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1 D) எண்.32** **நாள்: 26.09.2014**

**ஜய–புரட்டாசி 10, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க.எண்.3238/சிப/2014, நாள் 15.07.2014.

--------

**<u>ஆணை</u>**:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள காதுகேளாதோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர், 2014–2015 ஆம் கல்வி ஆண்டிற்கு மாணவர்கள் சேர்க்கை அதிகமாக வரப்பெற்ற நிலையில், மாணவர்களின் கல்வி நலன் கருதி, தற்போது செயல்பாட்டில் உள்ள பாடப்பிரிவு (Group Code 302) உடன் கூடுதலாக, பாடப்பிரிவு பொருளியல் (Group Code 404) நடத்த அனுமதி கோரியதாகவும், பொருளியல் பாடப்பிரிவு, 2011–2012 ஆம் கல்வி ஆண்டு வரை மேற்படி பள்ளியில் செயல்பாட்டில் இருந்தது என்றும், பின்னர் கணினி அறிவியல் பாடப்பிரிவு துவங்கப்பட்டதால் தற்காலிகமாக பொருளியல் பாடப் பிரிவு கடந்த இரு ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் தெரிவித்து, தற்போது, இப்பள்ளியில், ஜுன் மாதம் முதல் +1 மேல்நிலை வகுப்புகள் நடைபெற்று வருவதால், 2014–15 ஆம் ஆண்டு, அரசுக்கு கூடுதல் செலவினம் ஏதும் இன்றி, சில நிபந்தனைகளின் பேரில், தமிழ், பொருளியல், வரலாறு, புவியியல், அரசியல் அறிவியல் ஆகிய பாடப் பிரிவுகள், ஆசிரியர்கள் கல்வித் தகுதிக்கேற்ப பாடங்கள் கையாள அனுமதி வழங்கப்பட்டமைக்கு பின்னேற்பாணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே, பத்தி–2ல் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, தஞ்சாவூர் காதுகேளாதோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில், 2014–2015 ஆம் கல்வியாண்டில், மாணவர்கள் சேர்க்கை அதிகமானதைத் தொடர்ந்து, கூடுதலாக பொருளியல் பாடப்பிரிவு (பொருளியல், வரலாறு, புவியியல்,

**[த.பி.பா]**

அரசியல் அறிவியல்) நடத்திட, கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரால் அனுமதி அளிக்கப்பட்டதற்கு, பின்னேற்பாணை வழங்கி அரசு ஆணையிடுகிறது:–

அ) இப்பள்ளிக்கு, கூடுதல் பாடம் கற்பிக்க அனுமதி அளிக்கப்படுவதையடுத்து கூடுதல் செலவினம் குறித்து எவ்வித கோரிக்கையும் அரசிடம் கோருதல் கூடாது.

ஆ) தலைமையாசிரியரால் வரையறுக்கப்பட்ட பள்ளி பாடப்பிரிவு ஏற்கனவே இப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் தவிர, புதிய ஆசிரியர்கள் நியமனம் குறித்தான கோரிக்கை ஏதும் கோருதல் கூடாது.

இ) 2014–2015 ஆம் ஆண்டில், இப்பள்ளியில் மாணவர்கள் தேர்ச்சி சதவீதம் 100% (2011–2012 ஆம் ஆண்டு போல்) அடைய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை-78
தலைமை ஆசிரியர், காதுகேளாதோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை-78 வழியாக)
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்
மாநில கணக்காயர், சென்னை-18/பெயரில்
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
மாவட்ட கருவூல அலுவலகம், தஞ்சாவூர்.

**நகல்**:
பள்ளிக் கல்வித் துறை, சென்னை -9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இ.கோ./உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.